## தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தல் - 2026

# கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் தேர்தல் பிரச்சாரம்!

## இன்று பரமக்குடி, தூத்துக்குடியில் உரையாற்றுகிறார்!

**த**மிழகம் முழுவதும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்கு சேகரிக்கிறார்.

இந்த தொடர் பிரச்சாரத்தை தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மார்ச் 31-ஆம் தேதி திருவாரூரில் தொடங்கிய நிலையில், நான்காம் கட்ட பரப்புரையை ஏப்ரல் 10-ஆம் தேதி தஞ்சாவூரில் தொடங்கினார்.

தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில், சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடும் கழக வேட்பாளர்கள் மற்றும் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இன்று பரமக்குடி, தூத்துக்குடியில் உரையாற்றுகிறார்!



## தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தேர்தல் பிரச்சார விவரம்

| நேரம் | இடம் | கலந்து கொள்ளும் சட்டமன்றத் தொகுதிகள் |
|---|---|---|
| | 12.04.2026 (ஞாயிற்றுக்கிழமை) | |
| மாலை 4 மணி | பரமக்குடி (பொதுக்கூட்டம்) | பரமக்குடி, திருவாடானை, ராமநாதபுரம், முதுகுளத்தூர் |
| மாலை 7 மணி | தூத்துக்குடி (பொதுக்கூட்டம்) | விளாத்திகுளம், தூத்துக்குடி, திருச்செந்தூர், திருவைகுண்டம், ஒட்டப்பிடாரம், கோவில்பட்டி |

குறிப்பு:

❖ கழகத் தலைவர் அவர்கள் மேற்குறிப்பிட்டுள்ள இடங்களில் பிரச்சாரத்திற்கு குறித்த நேரத்திற்குள் செல்ல வேண்டியுள்ளதால், காலத்தின் அருமை கருதி, எக்காரணம் கொண்டும் கழகத் தோழர்கள், வழியில் வேறு எவ்வித நிகழ்ச்சிகளையும் ஏற்பாடு செய்திட வேண்டாமென கண்டிப்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

❖ கழக முன்னணியினர் மற்றும் நிர்வாகிகள் அனைவரும் தலைவர் அவர்கள் தங்கும் இடத்திற்கு வருவதை தவிர்த்து, பிரச்சாரக் கூட்டத்திற்கு நேரடியாக வருகை தர வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள் : 08.04.2026

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.



அருப்புக்கோட்டை சட்டமன்றத் தொகுதிக்கு மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி தி.மு.க. வேட்பாளர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் அவர்களை ஆதரித்து, தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி பொது மக்களை நேரில் சந்தித்து வாக்குகள் சேகரித்தார். உடன் முன்னாள் நகர் மன்றத் தலைவர் சிவப்பிரகாசம், முன்னாள் எம்.எல்.ஏ. விஜயகுமார், நகர திமுக செயலாளர் ஏ.கே.மணி, இளைஞர் அணி துணை செயலாளர் பாபுஜி ஆகியோர் பங்கேற்றனர்.



திருச்சுழி சட்டமன்றத் தொகுதிக்கு மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி திமுக வேட்பாளர் தங்கம் தென்னரசு அவர்களை ஆதரித்து, தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்கள் பொது மக்களை நேரில் சந்தித்து வாக்குகள் சேகரித்தார். உடன் ஒன்றிய தி.மு.க. செயலாளர் பொன்னுத்தம்பி உள்ளார்.

### மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் வேட்பாளர் சபா.இராசேந்திரனை ஆதரித்து

## நெய்வேலி தொகுதியில் இரா.முத்தரசன் வாக்கு சேகரிப்பு!



கடலூர்,ஏப்,12–

கடலூர் மேற்கு மாவட்டம், நெய்வேலி சட்டமன்றத் தொகுதியின் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர் சபா.இராசேந்திரனுக்கு ஆதரவாக, காடாம்புலியூர் பேருந்து நிறுத்தம் அருகில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் மாநிலத் தலைவர் இரா.முத்தரசன் பொது மக்களிடம் வாக்கு சேகரித்தார்.

அப்போது பேசிய இரா.முத்தரசன் அவர்கள், பா.ஜ.க. – அ.தி.மு.க. கூட்டணி ஆட்சி தமிழகத்தில் அமைந்தால் ஏற்படும் பாதிப்புகளை கடந்த கால நிகழ்வுகளைச் சுட்டிக்காட்டி விளக்கினார்.

மத்தியில் ஆளும் பா.ஜ.க. அரசு தொடர்ந்து தமிழ்நாட்டைப் புறக்கணித்து வருவதாகவும், 100 நாள் வேலைத் திட்டம், கல்வி நிலுவைத் தொகை, வரி பகிர்வு உள்ளிட்ட பல்வேறு திட்டங்களில் தமிழ்நாட்டுக்கு உரிய நிதியை வழங்காமல் அலட்சியம் காட்டுவதாகவும் குற்றம் சாட்டினார்.

"ஒன்றிய பா.ஜ.க. அரசின் இத்தகைய அணுகுமுறையை தமிழ்நாட்டில் ஒருபோதும் அனுமதிக்கக் கூடாது என்று வலியுறுத்திய முத்தரசன், பொதுமக்களிடம் உரையாற்றுகையில், "2026 ஏப்ரல் 23ஆம் தேதி நீங்கள் அனைவரும் உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து, நெய்வேலி சட்டமன்றத் தொகுதியின் வெற்றி வேட்பாளர் சபா.இராசேந்திரன் அவர்களை பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார்.

பிரச்சாரத்தில் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர் துரை, தொகுதி பொறுப்பாளர் எம்.கே. பாஸ்கர், ம.தி.மு.க. மாவட்ட பொருளாளர் செந்தில், கம்யூனிஸ்ட் கட்சியின் பண்ருட்டி வடக்கு ஒன்றிய செயலாளர் ஞானசேகர், பண்ருட்டி தெற்கு ஒன்றிய செயலாளர் வெங்கடேசன், நெய்வேலி நகர செயலாளர் குணசேகரன், மாவட்டக் குழு உறுப்பினர்கள் லாரன்ஸ், மணிவண்ணன், தலைமைப் பொதுக் குழு உறுப்பினர் அறிவழகன், ஒன்றியத் தலைவர் ராஜா, மாவட்டப் பிரதிநிதி ஆடலரசன், ஒன்றியத் துணைச் செயலாளர் செல்வகுமார், சுப்பிரமணியன், மாவட்டப் பொறியாளர் அணி துணை அமைப்பாளர் பாண்டுரங்கன், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் அன்பழகன், நெய்வேலி தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் ஆனந்தன், சந்தியா கிளை செயலாளர்கள் முருகன், ஜோதி உள்ளிட்டோர் உடனிருந்து பிரச்சாரத்தில் ஈடுபட்டனர்.